**மட்டக்களப்பு மாநகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மட்டக்களப்பு மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாகக் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ஆசியா பவுண்டேசன் நிறுவனத்திடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட 2 கணணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்ட பங்களிப்புப் பணம் ரூபா 28,354,199 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 80,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மின்சார அரிவாள் வழங்குனருக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டு அதற்கான பணம் பெறப்பட்டிருந்த போதிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் சொத்துக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 110,729,563 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 29,634,718 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 81,094,845 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

மாநகர சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூபா) | உள்ளபடியான வருமானம் (ரூபா) | 31 திசெம்பர் 2015 இல் திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| வீதவரிகள் | 20,476,155 | 18,147,819 | 21,837,718 |
| விளம்பர கட்டணம் | 4,604,415 | 3,695,170 | 2,280,632 |
| வியாபார கட்டணம் | 8,910,877 | 9,377,067 | 2,893,052 |
| கொல்களக் கட்டணம் | 34,939 | 40,987 | 17,174 |
| குத்தகை | 8,212,817 | 4,593.802 | 10,395,219 |
| களியாட்ட வரி | 1,169,266 | 1,021,269 | 945,440 |
| விடுதி வாடகை | - | 125,759 | 326,350 |
| வெளிக்கடை வாடகை | 2,229,400 | 2,301,452 | 1,015,974 |
| சந்தைக்கடை வாடகை | 3,231,550 | 3,011,985 | 971,795 |
| வாடி வீட்டு வாடகை | 468,000 | 682,500 | 815,823 |

#### 2.2.2 ஆதன வரிகள்

மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ஆதன வரி ரூபா 21,837,718 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 வாடகை அறவீடு
---------------------

சபைக்குச் சொந்தமான வாடி வீடுகளை வாடகைக்கு வழங்கிய வகையில் இலங்கை இராணுவத்திடமிருந்து 1983 தொடக்கம் 2015 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 406,322 தொகையும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 2013 செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரை அறவிடப்படவேண்டிய ரூபா 156,000 தொகையும் மற்றும் சபைக்குச் சொந்தமான உத்தியோக பூர்வ இல்லத்தை இலங்கை இராணுவத்திற்கு வாடகைக்கு வழங்கிய வகையில் 2012 ஆம் ஆண்டுவரை அறவிடப்பட வேண்டிய ரூபா 326,350 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 குத்தகை வருமானங்கள்
------------------------------

சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைதாரர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் சொத்துப் பிணையோ அல்லது வங்கிப்பிணையோ பெறப்படாது குத்தகைக்கு வழங்கியதனால் 1990 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு இறுதி வரை 61 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய குத்தகை நிலுவை ரூபா 6,492,873 அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.5 தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுரங்களுக்கு இசைவுச் சான்றிதழ் வழங்குதல்
---------------------------------------------------------------------------------------------------

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவுவதற்காக இசைவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாது மாநகர சபை எல்லைக்குள் 07 தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு
---------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை
----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் ($2^{nd}$ HSDP) நிதியளிப்பின் கீழ் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி மாநகர சபையினால் தனியார் வைத்தியசாலைகளின் கழிவுகளை எரியூட்டுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,624,800 பெறுமதியான Medical waste Incinerator உபகரணம் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்படாமை காரணமாக 2016 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாமல் உள்ளது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற 13 ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா 548,503 தொகையை அவர்களின் இளைப்பாற்று பணிக் கொடையிலிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து பதவி வறிதாக்கப்பட்ட 09 ஊழியர்களின் ரூபா 550,998 கடன் நிலுவைகளை அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்
---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை முதல்வரால் சபைக்குச் சொந்தமான அண்ணளவாக 84 பேர்ச் விஸ்தீரணம் உடையதும் ரூபா 15 மில்லியன் பெறுமதியானதுமான 05 காணிகள் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமலும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாமலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மாநகர எல்லைக்குட்பட்ட தனிப்பட்ட காணியை உப பிரிகை செய்து விற்பனை செய்வதாயின் அதில் குறித்த ஒரு பகுதி மாநகர சபைக்கு பொது வசதிகளுக்காக ஒப்படைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான பெறுமதி வாய்ந்த ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் தனது மனைவியின் பெரிலும் தனது பெயரிலும் 2003 - 2006 காலப்பகுதியில் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை..

3.3 ஒப்பந்த நிருவாகம்
------------------------

கிறின் பெல்ட் செயற்திட்டம்
----------------------------------

மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட கல்லடி திருச்செந்தூர் கடற்கரை பிரதேசத்தில் யுஎன்கெபிறாற் (UNHABITAT) நிறுவனத்தின் நிதி உதவியுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,279,886 செலவு செய்து 600 மரங்களும் 2,400 செடிகளும் நாட்டப்பட்டு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டன. எனினும் மரக்கன்றுகள் நாட்டப்பட்ட இடத்தில் தற்பொழுது சுமார் 157 மரங்கள் மாத்திரமே காணப்படுவதால் குறித்த திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த விளைவை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 3.4 திண்மக்கழிவு சேகரிப்பு முகாமைத்துவம்

2006 ஆம் ஆண்டு நெக்டப் நிறுவனத்தினால் சுமார் ரூபா 100 மில்லியன் செலவிடப்பட்டு திருப்பெருந்துறையில் அமைந்திருந்த திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையம் விஞ்ஞான ரீதியான கழிவகற்றல் நிலையமாக மாற்றியமைக்கப்பட்ட போதிலும் . 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின்படி சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டிருக்காததுடன் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது மக்கள் குடியிருக்கும் இடத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளதால் இப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளதுடன் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் காணப்படுகின்றது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின்படி கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 0.2% தொடக்கம் 90% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான முகாமைத்துவம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு